தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1978 ஏப்ரல் 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*16 குறுகிய கால வினா—

நீண்டகரை கிராமத்தில் உள்ள சாம்பகுளம்

திரு. எம். வின்சென்ட் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நாகர்கோவில் தொகுதி, நீண்டகரை கிராமத்தில் உள்ள சாம்பகுளம் எத்தனை ஏக்கர் விஸ்தீரணம் உள்ளது ?

(ஆ) சாம்பகுளத்தின் வடபாகம் திட்டையாக இருப்பதால் அதனை ஆக்கிரமிப்புச் செய்து பயிர் செய்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) இதனால் சாம்பகுளத்தில் தேங்கவேண்டிய நீர் வீணாகக் கடலுக்குப் போகிறது என்பது பற்றி அரசுக்குத் தகவல் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—(அ) விஸ்தீரணம் 23.60 ஏக்கர் ஆகும்

(ஆ) சுமார் 2 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) கடந்த மூன்று வருட காலமாகப் பயிர் செய்யும் காலங்களில் தண்ணீர் வீணாகச் செல்லவில்லை.

திரு. எம். வின்சென்ட் — இந்த சாம்பகுளம் சுமார் 600 ஏக்கர் அளவிற்கு விவசாயமும் 30 ஊர் மக்களுக்கு குடிநீரும் இவற்றிற்காகப் பயன்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? மிகச் சிறிய விவசாயிகள் தண்ணீர் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இந்த சாம்பக்குளத்தில் உள்ள சகல ஆக்கிரமிப்புகளையும் மாற்றி சாம்பகுளத்தில் போதுமான அளவிற்கு தண்ணீர் தேக்க முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தக் குளத்தின்கீழ் 784 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது என்பது அரசுக்குத் தெரியும். ஆனால், அங்கே கண்ணீர் விடுவதாகத் தகவல் இல்லை. தண்ணீர் விடுவதாகத்தான் தகவல் இருக்கிறது. 1.28 ஏக்கர் நிலம் ஏரியின் முழு நீர் பிடிப்பு மட்டத்திற்கு மேல் உள்ளது. அதில் சிலபேர்கள் குடிசை போட்டிருக்கிறார்கள். ஆனால் .071 ஏக்கர் நீர் பிடிப்பு மட்டத்திற்கு கீழுள்ளது. இருப்பினும் இந்த இரண்டிலும் ஆக்கிரமிப்புச் செய்கிறவர்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று அரசு சொல்லியுள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த நிலை சாம்பகுளத்தில் மட்டுமல்ல அநேகமாக எல்லாக் குளங்களிலும் ஆக்கிரமிப்பாளர்கள் பெரும் பகுதியை ஆக்கிரமித்துவிடுவதால் தண்ணீரை அதிகமாகத் தேக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதனால் விவசாயம் பாதிக்கப் படுகிறது. ஆகவே. எல்லாக் குளங்களிலிருந்தும் அனைத்து ஆக்கிரமிப்பாளர்களையும் அகற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆக்கிரமிப்பாளர்கள் எங்கிருந்தாலும், எந்த வகையில் வந்தாலும் அகற்றப்பட வேண்டியவர்களாவார்கள்.

திரு. அ. சுவாமிதாஸ் : இந்த சாம்பக்குளத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறவர்களை அகற்றுவது மட்டுமல்லாமல் அதில் மேடிட்டிருக்கிற பகுதிகளை ஆழப்படுத்த அரசு உடனடியாக ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முதலாவதாக இந்த ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுகிற வேலை முடியட்டும், பின்னர் ஆழப்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கலாம்.